**DEPOSITION OF WITNESS**
**(Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , ARANTHANGI**

| | | |
|---|---|---|
| **Calender** | | **CC.No.31/2021** |
| **Miscellaneous** | | |
| **Preliminary Register** | | |
| **Sessions** | | |
| **Deposition of witnesses for** | அ.சா.6 | |
| **Name:** | ராமன், காவல் உதவி ஆய்வாளர் | **Caste** |
| **Father's Name** | ஜெயராமன் | **Calling** |
| **Village** | | **Religion** |
| **Taluk** | | **Age 38 /22** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1993 of the day of 11.10.2022**

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்போது புதுக்கோட்டை மாவட்ட காவல் அலுவலகத்தில் தனிபிரிவு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.08.2019 ம் தேதி நான் அறந்தாங்கி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பொறுப்பில் இருந்தபோது அத்தாணி கிராத்தை சேர்ந்த சுப்பையா மகள் சரண்யா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று அறந்தாங்கி காவல்நிலைய குற்ற எண்.358/2019 பதிவு செய்து விசாரணை செய்யப்பட்டது. பின்பு அதே தேதியில் இ.த.ச.பிரிவுகள் 294(பி), 427, 506(2) r/w Sec 4 of TNPHW Act ஆகிய பிரிவுகளின்கீழ் முதல் தகவல் அறிக்கையானது எதிரிகள் மீது பதிவு செய்யப்பட்டது. **மேறப்டி முதல் தகவல் அறிக்கையானது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2) மேற்படி இவ்வழக்கில் சம்பவ இடம் சாட்சிகள் நாகையா மற்றும் இளமாறன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடமானது தயார் செய்யப்பட்டது. **மேற்படி பார்வை மகஜர் ஆனது அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடமானது அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் சரண்யா, சுப்பையா, கண்ணகி ஆகியோரை தனிதனித்தாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகளை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யதும் எதிரிகளை தேடி வந்த நிலையில் 21.08.2019 அன்று 14.45 மணியளவில் கட்டுமாவடி முக்கம் அருகே நின்றுகொண்டிருந்த எதிரி குமாரினை காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்து உரிய வழிகாணலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பின்னர் எதிரி குமார் நீதிமன்றத்தில் பினையம் பெற்று இந்நாள்வரை இருந்து வருகிறார்.

3) பின்னர் இவ்வழக்கின் விசாரணையினை முடித்து குற்ற தன்மைக்கேற்ப இ.த.ச பிரிவுகள் 294(பி), 427, 506(2) and r/w Sec 4 of TNPHW Act கீழ் 21.09.2019 அன்று இறுதி அறிக்கையானது தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

4) இவ்வழக்கின் புகார்தாரர் எதிரியின் மனைவி என்றால் சரிதான். புகார்தாரருக்கும் அவரது கணவரான எதிரிக்கும் சம்பவத்திற்கு கருத்து வேறுபாடு காரணமாக தனித்தனியாக வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரிதான். புகாரில் புகார்தாரர் சேதப்படுத்தியதாக கூறியுள்ள பொருளில் சேதமதிப்பினை கூறவில்லை என்றால் சரிதான். சேதப்படுத்தப்பட்ட பொருளினை கைப்பற்றி நீதிமன்றத்தில் தடய பொருளாக ஒப்படைக்கவில்லை என்றால் தடய பொருட்கள் வீட்டு நிலை கதவு, ஆஸ்பெட்டாஸ் சீட் என்பதால் ஒப்படைக்கவில்லை. எதிரி மீது உள்ள தனிப்பட்ட காரணங்களுக்காக புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரினை முறையாக விசாரணை செய்யாமல் குற்ற இறுதியறிக்கையானது எதிரிமீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.